## கரம்பான் பிள்ளையார் துதி

ஒற்றைமருப்பானே ஓங்காரத்துட் பொருளே
கற்றோர் மனமுறையும் கரம்பான் பிள்ளையாரே
உற்றவினை களைந்து தற்பரனாம் உமைபங்கன்
பொற் கமலச் சேவடியில் சேர்த்தருள்வாய் ஐங்கரனே!

## ஆலடி விநாயகர் துதி

ஞாலம் புரக்கும் ஞானமருள் போதகனே
சீலந்தானுனைச் சிந்தையில் கொண்டுநாம்
காலந்தோறும் வந்தனை செய்திட்டோம்
ஆலமர் செல்வன் இணையடி சேர்ப்பிப்பாயே.

## உப்புவெளி சின்னத்தொடுவாய் பிள்ளையார் துதி

வாரணமுகத்தாய் போற்றி
வானவர் தலைவா போற்றி
பாரதம் எழுதுதற்காய்
மருப்பினை ஒடித்தாய் போற்றி
நாரணன் மருகா போற்றி
நானிலங் காப்பாய் போற்றி
தாரணி மௌலி ஈசன்
தாள் மலர் சேர்ப்பிப்பாயே!

## திருகோணமலை திருக்கோணேஸ்வரர் துதி

முன்னொருநாள் இராவணனார் பெயர்க்க எண்ணி
பேதுற்றான் பெருங்கருணை பெற்றுமுய்தான்
பின்னொருநாள் சம்பந்தர் பரவல் செய்தான்
அன்னவனே ஆழிசூழ்வெற்பின் கண்ணே
மன்னவருந் தொழுதேத்த மாதினோடு
மாந்தர்வினை தீர்த்தருளும் கோணநாதா
மின்னிடையாள் மாயாப்பிறவி நீத்தாள்
மலர்ப்பதத்தில் அமைதிபெற அருளுவாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுராதபுரம் கதிரேசன் ஆலய துதி

செந்தமிழ் புலவர் போற்றும் கதிர்வடி வேலோய் போற்றி
சிந்தையில் குடிகொண்டருளும் சிவகுருநாத போற்றி
வந்தனை செய்த பேறாய் முந்திய வினைகள் தீர்த்து
கந்தவேள் குமரா நீயும் பரகதி நல்குவாயே.

## திருகோணமலை பத்திரகாளியம்மன் துதி

கத்துகடற் கரையமர்ந்து காத்தருளும் பொங்கியருள்
பத்திரகாளியம்மா பழவினைகள் மாழ்விப்பாய்
நித்தமுந்தன் சேவடியை வந்தித்த வைதேகி
முத்திநிலை சேர முன்வந்தருளுவாயே!

## மந்திகை கண்ணகை அம்மன் துதி

அணிமணிச் சிலம்பு தாங்கி மந்திகைப் பதியை மேவி
அணிமணி மன்னன் கோயில் அறந்தனை யுரைத்ததாயே
பணி கொள்ளும் வகையினாலே பரவினோம் பக்தியோடு
பிணியெனும் வினைகள் தீர்த்து பிஞ்ஞகன் உலகஞ் சேர்ப்பாய்.

## பிலாவடி வைரவர் துதி

அந்தமில் சோதியன்னான் வடிவினாய் அவதரித்தே
பந்தமாம் பாசமெல்லாம் பாறிடச் செய்யும் பரனே
குந்தகம் வருமுன் காக்கும் கபாலனே! தஞ்சமென்றோம்
வந்தனை செய்த பேறாய் வரமளித் தருளுவாயே.

## காயாமரை பைரவர் துதி

பங்கயத்தோன் அகந்தையினை அடக்கியன்று
இங்கமர்ந்தே இகமதனைப் புரந்தாயின்று
செய்கனலோய்! நினதடியே போற்றி செய்தோம்
சங்கரனார் தாள் சேர கிருபை தாராய்.

## மருதடி வையிரவர் துதி

வானுறு அயன்மாலறியா மருதடிப்பதியில் வைகும்
பானுறு சுடரோய்! உந்தன் சேவடி போற்றுகின்றோம்
தேனலர் குழலாள் வினைகள் தேய்வுறச் செய்துந்தன்
கானுறு மலர்ப்பதத்தில் கலந்திடச் செய்குவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திருமதி. வைதேகி சிவசெந்திநாதன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கைத்தீவின் வடமத்தியில் அமைந்துள்ள அனுராதபுரம் கதிரேசன் ஆலயத்தில் பிரதமகுருக்களாக இருந்து வந்த சிவஸ்ரீ.பொ.இ.நடராஜக்குருக்கள் இராஜேஸ்வரி தம்பதிகளின் இரண்டாவது மகளான பாலமகேஸ்வரிக்கும், திரியாயைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சின்னப்புஐயர் தம்பதிகளின் சிரேஸ்ரபுத்திரன் திரு.விஸ்வலிங்கத்திற்கும் ஏக புத்திரியாக 1974.10.09 ஆம் திகதி அனுராதபுரத்தில் அமரர் வைதேகி பூமியில் வந்துதித்தார். பின்பு நாட்டு சூழ்நிலை காரணமாக திருகோணமலை கலைமகள் பாலர் பாடசாலையில் பாலர் கல்வியைத் தொடங்கிய எமது குலவிளக்காம் வைதேகி பின்பு திருகோணமலை சண்முகா இந்துமகளிர் கல்லூரி யில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இத்தருணத்தில் தனது அன்புச் சகோதரனாக திரு.வைகுந்தனையும் கொண்ட இவர் சில காலம் கோப்பாய் நாவலர் வித்தியாலயம் மற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்பு க.பொ.த. சாதாரண, உயர்தர கல்வியை திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்த அவர் 1996 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி மாணவராக சேர்ந்தார். 1997ஆம் ஆண்டில் பொது எழுவினைத் தேர்வில் சித்திபெற்று, வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதி நில அளவையாளர் நாயகத் திணைக்கழகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றினார். தனது கடமை யில் சிறந்து விளங்கியதுடன் 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி குருக்கள்குடியிருப்பு வரணியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஸ்ட புத்திரன் திரு.சிவசெந்திநாதனுடன் திருமணபந்தத்தில் இணைந்து திருகோணமலையில் இல்லறவாழ்வில் நலமாக வாழ்ந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் அன்னாரின் சித்தத்தால் அவரது கணவர் கணக்காள ராக நியமனம் பெற்றார். இல்லறம் செய்த நல்லறப் பேறால் 2003.11.11 ஆம் திகதி அபராயுதன் என்ற நாமம் கொண்ட புத்திரனை யும் 2005.11.02 ஆம் திகதி அபர்ணியா என்ற நாமம் கொண்ட புத்திரியையும் பெற்றெடுத்தார். பிள்ளைகளுக்கு பாசத்துடன் கல்வியையும் ஊட்டி வளர்த்து வந்தார். பிள்ளைகளின் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்திய அன்னார் அவர்களின் உயர்ச்சி க்கு தொடர்ந்தும் பாடுபட்டு வந்தார்.

2012.08.10 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்து அன்னார் 11.08.2012 இல் நல்லூர் முருகன் ஆலயத்தில் தங்கமயில் திருவிழாவையும் கண்டு களித்தார். மறுநாள் 12.08.2012 தனது கணவரின் ஊரான வரணிக்கு போய் அங்கும் குலதெய்வமான வைரவரை வணங்கிவிட்டு உறவினர்களுடன் உறவாடி உண்டு மகிழ்ந்து மாலை வேளை மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு தனது குடும்பத்தாருடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது புத்தூர் வீதியில் எதிர்பாராத வாகன விபத்தினால் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்திய அன்னார் என்றும் இறைவன் திருவடிக் கமலத்தில் வீற்றிருப்பதோடு அனைவரது நெஞ்சங்களிலும் நின்று நிழலாடுவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவர் வழிபாடும் அதன் மகிமையும்

யாழ்ப்பாணத்தில் பைரவர் வழிபாடு சிறப்பானதொரு இடம் பெற்று விளங்குவதைக் காணலாம். எல்லாச் சிவனாலயங்களிலும் பைரவர் திருமேனி விளங்கும். க்ஷேத்திரபாலகர் உருவத்தில் சில வற்றில் நாய் வாகனம் இருக்கும் அல்லது வாகனம் இல்லாதும் விளங்கும். அதுபோன்றே பைரவர் திருமேனியின் பின்னால் நாய் வாகனம் இருக்கும். சில திருமேனிகள் இருக்காது. காவற் தெய்வமாக போற்றப்படுகின்ற பைரவருக்கு கிராமப்புறங்களில் தனிக்கோயில்களே அதிகம் உண்டு.

**திருக்கோயிலில்**

சிவலாயங்களின் வடகிழக்கு மூலையில் பைரவர் சன்னதி அல்லது திருமேனியினைக் காணலாம். சிவபெருமான் கொண்ட 64 திருமேனிகளுள் பைரவர் திருமேனியும் ஒன்றாகும். இவ் வடிவம் ஆடையின்றி நாய் வாகனத்துடன் உக்ர பார்வையுடன் கோரைப் பற்கள் விளங்க பெரும்பாலும் நின்ற திருக்கோலத்தில் நான்கு கரங்களுடன் விளங்கும். டமருகம், பாசம், சூலம், கபாலம், முதலியன பொதுவாக கரங்களில் திகழும். இவரே திருக்கோயி லைப் பாதுகாப்பவரும், ஊரினைப் பாதுகாப்பவரும் ஆவார். இதனால் இவரை **க்ஷேத்ரபாலகர் (க்ஷேத்ரம் – ஊர், பாலகர் – இளமையான தோற்றம்)** என்று கூறுவர். ஊரின் காவல் தெய்வமாக போற்றப்படுவது துர்க்கையும், பைரவருமே ஆகும்.

**பல பெயர்கள்**

பைரவ மூர்த்தியினை பல பெயர்களால் போற்றுகின்றனர். பிரம்மசிரச்சேதர், உக்ர பைரவர், பைரவர், க்ஷேத்ரபாலகர், வடுகர், ஆபதுத்தாரணர், சட்டைநாதர் என்றும் பிங்கல நிகண்டில் – கஞ்சுகன், கரிமுக்தன், நிர்வாணி, சித்தன், காபாலி, வாதுகன் என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் 64 பைரவர்களின் பெயர்களும், அஷ்டபைரவர்களின் பெயர்களும், நாமாவளியின் பெயர்களும் இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பைரவர் வழிபாடும் சகல தோஷ நிவர்த்தியும்**

பைரவ வழிபாடு கைமேற்பலன் உண்டு. சிவபெருமானே பைரவர் என்றும், சிவனது பஞ்சகுமாரர்களில் பைரவரும் ஒருவர் என்றும் முற்பகுதியில் நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள். நவக்கிரகங்களின் தொல்லைகளால் பலர் வாழ்க்கையில் மிகுந்த துன்பத்தை அடைந்துள்ளனர். நவக்கிரகங்களின் நல்ல பார்வையால் சிலர் அபரிதமான காரியத்தையும் புகழையும் பெற்றுள்ளார்கள். **சிவபெருமானே எல்லாவற்றிற்கும் மேலானவர்.** சிவவழிபாடே சிறந்த வழிபாடு ஆகும். **பைரவரும் சிவனே ஆவார்.** பைரவர் வழிபாட்டால் நமது இன்னல்கள் யாவும் களையப்பட்டு என்றும் நலமான வாழ்வு கிடைக்கும். மேலும் ஜோதிடத்தில் பைரவர் வழிபாட்டினை பல தரப்பட்டதாக நாம் மேற்கொள்ளும்போது பல தோஷங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. அந்த வகையில் பின்வரும் ஜோதிடப் பரிகார விளக்கங்கள் பல பலன்களைத் தருவதாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிரகங்கள் | அதிதேவதை | ப்ரத்யதிதேவதை | ப்ராணதேவதை | ப்ராண தேவதையின்உபசக்தி | சக்தியை வழங்கியவர் |
|---|---|---|---|---|---|
| சூரியன் | அக்கினி | ருத்திரன் | சுவர்ணாகர்ஷண பைரவர் | பைரவி | பார்வதி |
| சந்திரன் | அப்பு | கௌரி | கபாலபைரவர் | இந்திராணி | இந்திரன் |
| செவ்வாய் | பிருத்வி | சேத்ரபாலன் | சண்டபைரவர் | கௌமாரி | முருகன் |
| புதன் | விஷ்ணு | நாராயணன் | உன்மத்தபைரவர் | வராகி | வராகமூர்த்தி |
| குரு | பிரமதேவன் | இந்திரன் | அசிதாங்கபைரவர் | பிராமி | பிரமதேவன் |
| சுக்கிரன் | இந்திராணி | இந்திரமருத்துவன் | ருருபைரவர் | மஹேஸ்வரி | மகேசுவரன் |
| சனி | யமன் | பிரஜாபதி | குரோதனபைரவர் | வைஷ்ணவி | விஷ்ணு |
| ராகு | பசு | சர்ப்பம் | சம்ஹாரபைரவர் | சண்டிகை | ருத்ரன் |
| கேது | சித்ரகுப்தன் | நான்முகன் | பீஷணபைரவர் | சாமுண்டி | யமன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரங்களைச் செய்யமுன் ஜோதிடர்கள் சிவாச்சாரி யர்கள் மற்றும் பெரியோர்களைக் கேட்டு முறைப்படி செய்தால் எல்லாம் கைகூடும்.

பைரவர் வழிபாடு நலம் தரும், வளம் தரும், நவநிதியும் எந்த கிரகத்தால் தோஷம் உள்ளதோ, எந்த கிரகம் வலுவாக வேண்டுமோ, எந்த கிரக திசாபுத்தி நடப்பில் உள்ளதோ அதற்குரிய பைரவரை வழிபட்டு நலம் பெறலாம்.

கிரகங்களுக்குரிய பைரவர்கள் அவர்களின் உபசக்திகள் யார் என்பதை அட்டவணையில் பார்த்தோம். கிரகங்களின் பிராண னாக உள்ள பைரவரால் நீங்கள் நற்பலன் அடைய அவர்களின் காயத்ரியுடன் உபசக்திகளின் காயத்திரியையும் சேர்த்து ஜெபித்து வந்தால் உங்கள் துன்பங்கள் ஓடி ஒளியும். இன்பங்கள் நாடி வரும். எனவே, இவர்களின் காயத்ரியை ஜெபித்திடவேண்டும்.

ஒருவருக்கு சூரிய திசை ராகு புத்தி நடப்பில் உள்ள தென்றால் அவர் சூரியனின் ப்ராண தேவதையான சுவர்ணா கர்ஷண பைரவர், ராகுவின் ப்ராண தேவதையான சம்ஹார பைரவர் மற்றும் அவர்களின் உபசக்திகளின் காயத்ரியை ஜெபித்துவர நலன் கிடைக்கும்.

சூரியன் நீசம் அடைந்திருந்தால் தகப்பன் ஸ்தானாதிபதி கெட்டிருந்தால் சூரியனின் ப்ராண தேவதையான சொர்ண ஆகர்ஷண பைரவர் காயத்ரியையும், தகப்பன் ஸ்தானாதிபதியாரோ அவரின் ப்ராண தேவதையான பைரவர் காயத்ரியையும் உபசக்தி களின் காயத்ரியுடன் ஜெபித்து வந்தால் பித்ருஸ்தானம் பலமடையும் எல்லா பாக்கியங்களும் கிடைக்கும்.

மனைவி ஸ்தானாதிபதியும் சுக்கிரனும் கெட்டிருந்தால் களஸ்திர ஸ்தானாதிபதியின் ப்ராண தேவதையான பைரவர் காயத்ரியையும் சுக்கிரனுடைய ப்ராண தேவதையான குரு பைரவர் காயத்ரியையும் அவர்களின் உபசக்திகளின் காயத்ரியையும் ஜெபித்து வர மனைவியால் நன்மை உண்டு. திருமணத்தடை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரஸ்தானாதிபதியும் குருவும் கெட்டிருந்தால் புத்திர ஸ்தானாதிபதியின் ப்ராண தேவதையான பைரவர் காயத்ரியையும் குருவின் ப்ராண தேவதையான அஸிதாங்க பைரவர் காயத்ரியையும் உபசக்திகளின் காயத்ரியையும் ஜெபித்துவர குழந்தை பாக்கியம் ஏற்படும்.

இதுபோல் தாயார் ஸ்தானாதிபதி, சுக்கிரன் மற்றும் சகோதர ஸ்தானாதிபதி, செவ்வாய் இவர்கள் கெட்டிருந்தால் அவரவர்களுக்குரிய பைரவர் காயத்ரியை ஜெபித்து நலம் பெறலாம்.

அர்த்தாஷ்டம் சனி, அஷ்டம சனி, ஏழரைச்சனி, சனிதிசை பாதிப்புள்ளவர்கள் குரோதனபைரவர் காயத்ரியையும் வைஷ்ணவி காயத்ரியையும் ஜெபித்து பாதிப்பை தடுக்கலாம்.

**பிதிர்தோஷம் விலகி வம்சாவளி வளம்பெற்றிட**

இவ்வுலக வாழ்வை நீத்த நம் முன்னோர்களுக்கு பிண்டம் போட்டு எள்ளும் தண்ணீரும் இறைப்பதென்பது அவர்களின் நல்வாழ்விற்கு வழி காட்டும், நன்மையளிக்கும் என்பர்.

இருக்கும்போது சாப்பாடு போடவில்லை செத்த பிறகு எள்ளும் தண்ணீரும் இறைப்பதால் என்ன பயன் என கேள்வி கேட்பவர் கூட எள்ளும் தண்ணீரும் இறைக்காவிடில் பிதிர்தோஷம், பிரேதசாபம் வந்து விடுமோ என்றெண்ணி, உள்ளூரில் செய்தால் தனது நாத்திகவாதசாயம் வெளுத்து விடுமே என்பதால் ஒரு சிலரும் கால பைரவ க்ஷேத்ரமான காசியில் செய்தால்தான் கதிமோட்சம் என்று ஒரு சிலரும் முன்னோருக்குரிய காரியத்தை செய்கின்றனர்.

முன்னோர்களின் நற்கதிக்கு செய்யக்கூடிய காரியங்களுக்காக காசி, இராமேஸ்வரம் சென்று திலாஹோமம் செய்வதுபோல பைரவர் சந்நிதியில் பிதிர்பூசை செய்து பிதிர்தோசம் நீங்கி நல்ல முறையில் வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிதிர்தோஷம் உள்ளவர்கள் யார்?**

ஒன்பதாமிடமான பிதிர்ஸ்தானத்தின் அதிபதியாக விளங்கும் கிரகம் பாவகிரகங்களுடன் இணைந்திருந்தாலோ, நீச்ச மடைந்திருந்தாலோ, ஒன்பதாம் இடத்தில் ராகு, கேது, சனி இடம் பெற்றிருந்தாலோ, சூரியன் 6, 8, 12 ல் மறைந்திருந்தாலோ துலாத்திலிருந்தாலோ, பிதிர்தோசம் உள்ளவர்கள் எனலாம். தந்தை யின் நல்ல சொல் கேளாதவர், தந்தையை துன்புறுத்துபவர் பிதிர் தோஷத்திற்கு ஆளாவர்.

பிதிர்தோஷம் நம்மை மட்டுமல்ல, நம் சந்ததியினரையும் பாதிக்கும். எனவே **பிதுர்தோஷத்தை பைரவர் அருளால் விலக்கிக் கொள்ளலாம்.**

ஞாயிற்றுக்கிழமை நாளில் ராகு காலத்தில் பைரவருக்கு ருத்ராபிஷேகம் செய்து புனுகு சாற்றிட நாகலிங்கப்பூ மாலை அல்லது எலுமிச்சை பழ மாலை அணிவித்து எள் கலந்த அன்னம் படையலிட்டு, இனிப்பு பதார்த்தங்கள், பாயாசங்கள் படைத்து முன்னோர்களை நினைத்து பிதுர் பூசைக்கான மந்திரங்களைக் கூறி அர்ச்சனை செய்து குறைந்தது 10 பேருக்காவது அன்னதானம் செய்தால் முழுமையாக பிதுர்தோஷத்தை பைரவர் நீக்குகின்றார். எனவே, பிதுர்தோஷம் நீங்கினால் உயர்வு பெற முடியும். எனவே மேற்கண்ட பரிகாரத்தை செய்து பலனடையுங்கள். இது பொது பரிகாரம். இதை எவர் வேண்டுமானாலும் செய்யலாம்.

ஒன்பதாமிடத்து அதிபதி கிரகம் யாரென்று அறிந்து அதற்கு தகுந்தாற் போல் செய்தால் கூடுதலான பலன் கிடைக்காதா என ஜோதிடர் கேட்டது காதில் விழுகிறது. ராசி மட்டுமே தெரிந்தவர்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணமே கொடுக்காதவர்கள் முன்னோர் களை சிரமப்படுத்தியவர்கள், ஜாதகம் தெரியாதவர்கள் எவர் வேண்டுமானாலும் மேற்கண்ட பரிகாரத்தை செய்து பித்ரு தோஷத்தை விலக்கிக் கொள்ளலாம்.

ஜாதகம் உள்ளவர்கள் எதனால் பித்ருதோஷம் ஏற்பட்டுள் ளது என்பதை ஜோதிடர் மூலம் அறிந்து கொண்டு பித்ரு பூசையின் போது கீழ் கண்டவற்றை கவனத்தில் கொண்டு பூசைகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஒன்பதாம் இடத்திற்குரிய கிரகம் | பைரவருக்கு அணிவிக்க வேண்டிய மாலை | படைக்க வேண்டிய இனிப்பு | படையலிடும்போது அன்னத்தில் கலக்கவேண்டிய பொடி, வேக வைத்த காய்கறிகள் | படைக்க வேண்டிய பழ வகைகள் | செய்ய வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| சூரியன் | செந்தாமரை | கோதுமை, அவல், கேஸரி | கரட் | ஆப்பிள் | ஞாயிறு |
| சந்திரன் | அல்லி | ஜவ்வரிசி பாயாசம். | முள்ளங்கி | சாத்துக்குடி | திங்கள் |
| செவ்வாய் | சண்பகம் | ஜிலேபி | பீட்ரூட் அல்லது துவரம்பருப்பு | மாதுளம்பழம் | செவ்வாய் |
| புதன் | வெண்காந்தள் (ஆ)மல்லிகை | பாசிபருப்பு பாயாசம் | பாசிபருப்பு பொடி | கொய்யாப்பழம் | புதன் |
| குரு | முல்லை | வேகவைத்தகடலை பருப்பு சர்க்கரையும் கலந்து செய்த உருண்டை | பருப்பு (வறுத்தது) | ஆரஞ்சுபழம் | வியாழன் |
| சுக்கிரன் | வெண்தாமரை | சேமியா பாயாசம் | சாம்பல்பூசணி பிதுக்கு பருப்பு சாம்பார் | மாம்பழம் | வெள்ளி |
| சனி | கருங்குவளை | எள்ளுருண்டை | பாகற்காய் கறிவேப்பிலை பொடி | கரும்திராட்சை | சனி |
| ராகு | மந்தாரை (ஆ) நீல நிறப்பூ | உளுந்து | உளுந்துபொடி | வாழைப்பழம் | சனி |
| கேது | செவ்வரளி | வேகவைத்த கொள்ளும் சர்க்கரையும் கலந்து செய்த உருண்டை | கொள்ளுப்பொடி | விளாம்பழம் அல்லது வில்வப்பழம் | செவ்வாய் |

மேற்கண்டவற்றை நன்கு கவனத்தில் கொண்டு பிதுர் தோஷத்திற்கு சொல்லப்பட்ட பரிகாரமுறையை அனுஷ்டித்து நல்ல பலன்களை அடையலாம்.

பிதிர்தோஷம் நிவர்த்தியடைந்து விட்டால் மட்டும் போதாது. பிதிர்தோஷத்திற்கு வழி தரும் செயல்களை செய்யக் கூடாது. முன்னோர்களை நிந்தனை செய்வதை நிறுத்தி விட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டச் சனியின் பிடியிலிருந்து மீள:**

ஏழாமிடமென்னும் களஸ்திரஸ்தானத்திலே தொல்லைகள் தரும் சனி வந்திட்டால் இல்லறத்திலே இணையற்ற துன்பங்கள் வந்து சேரும். கூட்டாளியனைவரும் குடி கெடுக்கும் பொல்லா மனிதராய் ஆவார். எண்ணற்ற தொல்லைகளிலிருந்து விடுபட கணவனோ, மனைவியோ விரும்புவது இயற்கை. எனவே திங்கட் கிழமை நாளில் காலை 7.30 முதல் 9.00 மணிக்குள் பைரவருக்கு அல்லிமலர் மாலை சூட்டி புனுகு பூசி சாம்பல் பூசணியில் விளக்கேற்றி பாகற்காய் கலந்த அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்துவர கண்டச் சனியால் ஏற்பட்ட தோஷங்கள் விலகும்.

**அட்டமச் சனியின் கொடுமை விடுபட :-**

எட்டாமிடத்திலே வந்து எண்ணற்ற இன்னல் தரும் சனி பகவான், ஆயுள் அமைதி தராவிட்டாலும் படாத சித்திரவதைப் படுத்தி விடுவார். அவருடைய தொல்லையிலிருந்து விடுபட சனிக்கிழமை நாளில் இரவு 7.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் பைரவருக்குக் கறுப்பு பட்டு அணிவித்து வடைமாலை கருங்குவளை மலர்மாலை, நீலோற்பவ மலர்மாலை அணிவித்து புனுகு பூசி கறிவேப்பிலை சாதம் படையலிட்டு இரும்பு அகல்விளக்கில் நல்லெண்ணெய் தீபமிட்டு அர்ச்சனை செய்து வந்தால் அஷ்டமச் சனியால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கும்.

**ஏழரையாண்டுச் சனியின் ஆதிக்கம் குறைய :-**

ராசிக்கு 12 ஆம் இடத்தில் இரண்டரை வருடம், ராசியில் இரண்டரை வருடம், என ஏழரையாண்டுகள் தன் கட்டுப்பாட்டிற்குள் மனிதனை சிக்க வைத்து ஆட்டிப் படைக்கும் சனி பகவான் பிடியிலிருந்து, தப்பிக்க வழிவகை உண்டா என ஒவ்வொரு மனிதரும் தவிப்பது இயல்பு.

ஊர்விட்டு ஊர் போவது, மனையாள் மதிக்காதது, பிள்ளைகள் சொன்னபடி கேட்காதது. தொழில் நஷ்டம், பணக் கஷ்டம், அவமானம் போன்ற அனைத்து இன்னல்களிலிருந்தும் தப்பிக்க செய்ய வேண்டிய பரிகாரத்தைக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியில் தடை அகலவும், கல்வியில் சிறந்து விளங்கவும் :**

புதன்கிழமை நாளில் பைரவருக்கு மரிக்கொழுந்து மாலை அணிவித்து புனுகு பூசி பாசிப்பருப்பு பொடி கலந்த அன்னம் பாசிப் பருப்பு பாயாசம் படைத்து அர்ச்சனை செய்து வந்தால் கல்வியில் ஏற்பட்ட தடை அகலும். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கலாம்.

**வியாபாரத்தில் வெற்றி வாகை சூட :**

புதன்கிழமை காலை 10.30 முதல் 12 மணிக்குள் பைரவருக்கு சந்தனக்காப்பு செய்து மரிக்கொழுந்து மாலை சூட்டி புனுகு பூசி பாசிப்பயிறு சுண்டல், பாசிப்பருப்பு பாயாசம், கொய்யாப்பழம், பாசிப்பருப்பு பொடி கலந்த அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து வந்தால் வியாபாரத்தில் வெற்றிவாகை சூடலாம்.

**தனப்ராப்தி ஏற்பட :**

தேய்பிறை அட்டமி நாளில் அல்லது வியாழக்கிழமை பைரவருக்கு சந்தனகாப்பு செய்து மஞ்சள் நிற சம்பங்கி மாலை சூட்டி புனுகுபூசி சுண்டல் படையலிட்டு பால்பாயாசம், நெல்லிக்கனி, ஆரஞ்சுப்பழம், வறுத்த கடலைப் பருப்பு பொடி கலந்த அன்னம் படைத்து அர்ச்சனை செய்து வர தனப்ராப்தி ஏற்படும்.

**குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் ஏற்பட :-**

வியாழக்கிழமை நாளில் காலை 7.30 மணிக்குள் பைரவருக்கு சந்தனக்காப்பு செய்து மூடி மந்திரவித்து எனப்படும் முந்திரியால் மாலை அணிவித்து (முந்திரிபருப்பால் மாலை அணிவித்தால் முழுபலன் ஏற்படாது. கர்ப்பப்பை போல அமைந்து உள்ளே குழந்தையை உள்ளடக்கியது போல காணப்படும் முந்திரி பருப்புடன் கூடிய முந்திரிக்கொட்டையால் மாலை அணிவித்தால் தான் முழுப்பலன் கிட்டும்) புனுகு பூசி முந்திரி பருப்பு கொண்டைக் கடலை சுண்டல், அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து அன்னதானம் 5 பேருக்கு வழங்கினால் பைரவர் திருவருளால் விரைவில் குழந்தைப் பாக்கியம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமணத் தடைகள் அகல :-**

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு சந்தனக் காப்பு செய்து புனுகு பூசி தாமரைமலர் மாலை அணிவித்து அவல் கேஸரி, பானகம், சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றைப் படைத்து அர்ச்சனை செய்துவர திருமணத்தடை அகன்று மனதிற்குப் பித்த துணை அமையும்.

**கலைத்துறையில் சாதனை படைக்க :-**

வெள்ளிக்கிழமை ராகுகாலத்தில் பைரவருக்கு சந்தனக் காப்பு செய்து புனுகு பூசி ரோஜா மாலை சூட்டி வெள்ளி அபரணங்கள் அணிவித்து சக்கரைப் பொங்கல் சேமியா பாயாசம், மாம்பழம் படைத்து அர்ச்சனை செய்து 6 வேளை கலைஞர்களுக்கு வஸ்திரதானம் செய்தால் கலைத்துறையில் சாதனை படைக்கலாம்.

**நாகதோஷம் விலக :**

வெள்ளிக்கிழமை நாளில் ராகு காலத்தில் பைரவருக்கு பாலபிஷேகம் செய்து புனுகுபூசி நாகலிங்க பூ மாலை அணிவித்து பால் சாதம், பால் பாயாசம் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்து வந்தால் நாகதோஷம் நீங்கும். (அருகே உள்ள பாம்பு புற்றருகே ஒரு முட்டையை மேல் பகுதியில் லேசாக உடைத்து வைக்க வேண்டும்)

**விஷபயம் நீங்க :**

சனிக்கிழமை நாளில் ராகுகாலத்தில் பைரவருக்கு நாகலிங்கப் பூ மாலை அணிவித்து புனுகு பூசி எள் கலந்த சாதம் பால் பாயாசம், கருநிற திராட்சை நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்தால் விஷபயம் நீங்கும். (நாகலிங்க பூமாலையில் சிறியாநங்கை, பெரியாநங்கை இலைகளை சேர்த்துக் கட்டுவது சிறப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரேத சாபம் நீங்க :**

எட்டிலே கேதுவை உடையவர்கள் பிரேத சாபம் உடையவர்கள் என்றும் மாங்கல்ய தோஷம் உடையவர்களென்றும் நீங்கள் அறிவீர்கள்.

பிரேதசாபம் விலக வேண்டுமானால் அமாவாசை நாளில் எமகண்டத்தில் பைரவருக்கு நீலநிற பூமாலை அணிவித்து புனுகுபூசி கறிவேப்பிலை அன்னம், எள் கலந்த அதிரசம் கொள்ளுப் பொடி கலந்த அன்னம், விளாம்பழம் அல்லது வில்வப்பழம் படையலிட்டு அர்ச்சனை செய்து எட்டுநபர்களுக்கு அன்னதானம் செய்து பசுவிற்கு எள்ளுருண்டை உண்ணத்தருவதுடன் காகத்திற்கு எள்சாதம் வைத்து வழிபட்டு, கறிவேப்பிலை சாதம் வைத்து வழிபட்டு வர பிரேத சாபம் விலகும்.

**மாங்கல்ய தோஷம் விலக வேண்டுமானால் :**

செவ்வாய்க்கிழமை நாளன்று எமகண்டத்தில் பைரவருக்கு சந்தனக் காப்பு செய்து மஞ்சள் கொம்பு மாலை சூட்டி, மஞ்சள் கயிறு (தாலிக்கயிறு) சமர்ப்பித்து சர்க்கரை பொங்கல், பால் பாயாசம், பானகம் படையலிட்டு அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால் சுமங்கலி பெண்களுக்கு மாங்கல்ய கயிறு குங்குமம் தந்து ஆசீர்வாதம் பெற்றால் மாங்கல்ய தோஷம் விலகும். தாலி பாக்கியம் நிலைக்கும். நவக்கிரகங்களின் ப்ராண தேவதையான நவ பைரவர்களின் காயத்ரியை ஓதி நற்பலன் பெறலாம்.

இந்தத் தோஷப் பரிகாரங்களை சிவனாலயத்தில் விளங்கும் பைரவர் சன்னதியில் செய்யலாம். மற்றும் தனித்து விளங்கும் பைரவர் ஆலயத்திலும் செய்யலாம். மங்களம் என்றும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்ப குலவிளக்கின் அகாலமரணச் செய்தி கேட்டு அந்த இடத்திற்கு ஓடி வந்து உதவிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி, குறுந்தகவல் மூலம் ஆறுதலும் தேறுதலும் கூறி எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், திருகோணமலை, கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களிலிருந்து தூரம் பாராது நேரம் பாராது ஓடி வந்து ஆறுதல் தெரிவித்தும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் பதாதைகள் கட்டியும் அனுதாபம் தெரிவித்த உள்ளங்களான

- ❖ பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலரும் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள் உள்ளிட்ட வருகைதந்த அனைவருக்கும்.
- ❖ திருகோணமலை மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்.
- ❖ கோமரன்கடவல பிரதேச செயலக பிரதேச செயலர் மற்றும் வருகைதந்த உத்தியோகத்தர்களுக்கும்.
- ❖ திருகோணமலை மாவட்ட கணக்காளர் சங்க உறுப்பினர் களுக்கும்.
- ❖ நிலஅளவைத் திணைக்களத்தின் பிரதி நிலஅளவை நாயகம் மாகாண அலுவலகம். மாவட்ட அலுவலகம் - திருமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா, யாழ்ப்பாண மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கும்.
- ❖ திருகோணமலை திருக்கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க குழு உறுப்பினர்கள் மற்றும் பழையமாணவர் சங்க உறுப்பினர்களுக்கும்.
- ❖ குச்சவெளி பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும்.
- ❖ கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர் - நிதி, மற்றும் வருகைதந்த உத்தியோகத்தர் களுக்கும்.
- ❖ திருகோணமலை மாவட்டத்திலிருந்து வருகை தந்த வங்கி உத்தியோகத்தர்களுக்கும்.
- ❖ திருகோணமலை உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரை யாளர்கள் மற்றும் மாணவர்களுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடக்கு மாகாணசபை கணக்காளர் சங்க உறுப்பினர்களுக்கும்.
- வடக்கு மாகாணசபை பிரதி பிரதம செயலாளர் - நிதி, பிரதி பிரதம செயலாளர் - திட்டமிடல் உள்ளிட்ட வருகைதந்த உத்தியோகத்தர்களுக்கும்.
- கணக்காய்வு அதிபதி திணைக்களத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு அலுவலகங்களில் இருந்து வருகைதந்த உத்தியோகத்தர் களுக்கும்.
- திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்.
- வரணி கலை வர்த்தகக் கல்லூரி மற்றும் சமூக விஞ்ஞான கல்லூரி சாவகச்சேரி மாணவர்களுக்கும்.
- சாவகச்சேரி பிரதேச செயலக பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும்.
- ஏனைய துறைசார், திணைக்களம்சார் ஊழியர்கள் அலுவலர் களுக்கும்.
- அத்துடன் பெயர் குறிப்பிட மறந்த அனைத்து உள்ளங்களுக்கும்.

சபிண்டீகரணக் கிரியைகளின் போது உதவி புரிந்தோர்க்கும் கிரியைகள் ஆற்றிய குருக்கள்மாருக்கும், கிரியைகள் நல்லபடியாக இடம்பெற ஒத்துழைத்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்.

மீளாத்துயரில் விட்டுப்பிரிந்த எமது குடும்பத் தலைவி வைதேகி சிவசெந்திநாதன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்த அனைத்து உள்ளங்களுக்கும், இம்மலரை அழகுற அச்சேற்றிய சிவரஞ்சனம் அச்சகத்தினருக்கும் இருகரம் கூப்பி எமது குடும்பத்தின் சார்பில் நன்றி நவில்கிறோம்.



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## …விருட்சம்

விஸ்வலிங்கம் சின்னப்புஜயர் + சிவபாக்கியம்

- விஸ்வலிங்கம்
- கணேசலிங்கம் + சரஸ்வதியம்மா
  - கமலாசினி + நிரஞ்சன் → சஞ்சயன்
  - இந்துராணி + ரவிசங்கர்
- ஈஸ்வரதாசன் + வாசுகி
  - துஸ்யந்தன் + மஞ்சுளா → பிரவீன், ரிசிகேஸ்
  - சசிதரன் + மோகனப்பிரியா → சாதனா
  - கேதீஸ்வரன் ❖
- அமிர்தகுணநாயகி + கௌசிகன்
  - கல்யாணி + அமலன் → கார்த்திகா
  - கிருபாநிதி ❖
- ஆனந்தசிவம் + சுகன்யா → சம்யுக்தா
- இராஜஇராஜேஸ்வரி + விபுலானந்தன்
  - தேவஜனனி
  - சிந்துஜன்
  - மாதங்கி

நடராஜக்குருக்கள் + இராஜேஸ்வரி

- ❖ மங்களேஸ்வரி
- பாலமகேஸ்வரி
- சிவசண்முகராசா + ஜெகதீஸ்வரி
  - சுமங்கலா + சர்வன்
  - நிகல்யா
  - நிசங்கா
  - ஹரினன்
- ❖ பாக்கியலட்சுமி + நமசிவாயம்
- K.V.மகேந்திரன் + யசோதா
- தேவமாதா + கேதீஸ்வரக்குருக்கள்
  - சுபகரி
  - மாதங்கி
- ❖ விசாகப்பெருமாள் + கோமளாதேவி
- சியாமளாதேவி
- உபேந்திரன் + பத்மாசனி
  - கேதுசன்
- கேதீஸ்வரன் + வாசுகி
  - ஆரபி
  - ஆதித்தியா
  - வர்சனி

விஸ்வலிங்கம் ⊕ பாலமகேஸ்வரி

- வைதேகி
- வைகுந்தன் + ஹேமலதா
  - ஸாத்விகா

…னம்மா

…ம்மா)

…க்கள்

வேலாயுதர் + செல்லம்மா

- ❖ சின்னாச்சிப்பிள்ளை
- ❖ சிதம்பரநாதர்
- ❖ பத்மாவதி

சரணியா பாலகரன்

- …லாசநாதக்குருக்கள் + யோகம்பிகை
  - லம்போதரன்
  - திருக்குமரன்
  - மைதிலி
  - நிதர்சினி
- கலைநிலா + செல்வராசா
  - கலைச்செல்வன்
  - சத்தியபாமா
  - சயந்தன்
  - துவாரகன்
  - மயூரன்
  - அபிராமி
  - திவ்யரூபி
- செல்வேள் + பவானி
  - உசாநந்தினி
  - சம்யுக்தா
  - தமிழினி

வைத்தியநாதர் + புவனேஸ்வரியம்மா

- சிற்றம்பலம் + கிரிசாம்பாள்
- ஈசன் + சுந்தராம்பிகை
  - நஞ்சனி
  - தர்சினி
  - பாபு
  - இராஜேஸ்வரன்
  - ஜெனோதன்
- விசாலாட்சியம்மா

… ⊕ வைதேகி

- அபாரகன்
- அபர்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

